செய்தி வெளியீடு எண்: 475 நாள்: 06.03.2024

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நீங்கள் நலமா" திட்டத்தில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள் பொதுவிநியோகத் திட்டம், பகுதிநேர நியாயவிலைக் கடை, ராகி மற்றும் நெல் கொள்முதல் தொடர்பாக மக்களின் கருத்துகளை அலைபேசி வாயிலாகக் கேட்டறிந்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "எல்லோருக்கும் எல்லாம்" கிடைக்க வேண்டும் என்ற பேர்ஆவலின் வெளிப்பாடாக அவர்களின் மற்றொரு மகத்தான திட்டமான "நீங்கள் நலமா" வைத் தொடங்கி வைத்தார்கள். அதனை உடனே செயல்படுத்தும் விதமாக மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பொதுவிநியோகத் திட்டம், பகுதிநேர நியாயவிலைக் கடை, ராகி மற்றும் நெல் கொள்முதல் குறித்து திருவாரூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தென்காசி, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 8 பேர்களிடம் கருத்துகளைக் கேட்டறிந்தார்.

அரிசி மிகவும் தரமாக உள்ளதாகவும் வழங்கப்படும் பொருள்கள் அனைத்தும் நன்றாக உள்ளதாகவும் கடை தற்போது அருகில் உள்ளதால் வசதியாக இருப்பதாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் தென்னூரைச் சேர்ந்த திருமதி இ. இளவரசி அவர்கள் கூறினார்.

நெல் கொள்முதலில் பணியாளர்கள் சிறப்பாகச் செயல்படுவதாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் நன்றாகச் செயல்படுவதாகவும் புதிய கொள்முதல் நிலையம் ஒன்று வேண்டும் என்று கடலூர் மாவட்டம் வான்ராசான்குப்பத்தைச் சேர்ந்த நெல் விவசாயி திரு. ப. அறவாழி அவர்கள் கூறினார்.

ஈரோடு மாவட்டம் நசியனூர் வெட்டுவபாளையத்தைச் சேர்ந்த திருமதி. பூங்கொடி அவர்கள் பொதுவிநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதாகவும் கடை உரிய நேரத்தில் திறக்கப்படுவதாகவும் குறை ஏதுமில்லை என்றும் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம், கொட்டாகுளத்தைச் சேர்ந்த திருமதி. ஏ. வசந்தி அவர்கள் மாதாமாதம் அங்காடிக்குச் சென்று பொருள்கள் பெற்று வருவதாகவும் எல்லாம் தரமாக இருப்பதாகவும் விற்பனையாளர் நன்றாக நடந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்டம் தீபங்குடியைச் சேர்ந்த நெல் விவசாயி திரு. பி. ஆரோக்கியசாமி அவர்கள் நெல்கொள்முதல் நிலையம் பக்கத்திலேயே உள்ளதாகவும் சீனியாரிட்டி அடிப்படையில் டோக்கன் முறையில் நெல்லைப் பெற்றுக் கொள்வதாகவும் பணம் உடனுக்குடன் வருவதாகவும் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம் கனிமங்களம் திருமதி. என். அஸ்வினி மற்றும் திரு. என். திம்மராஜ் ஆகிய இருவரிடமும் அவர்கள் கிராமத்தில் பொது விநியோகத்திட்டப் பகுதி நேர அங்காடி திறந்தது பற்றிக் கேட்டறிந்தார்.

முன்பு 8 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று பெற்று வந்த சிரமம் தற்போது இல்லாமல் அருகிலேயே அத்தியாவசியப் பொருள்கள் பெற்றுக் கொள்வது மகிழ்ச்சியளிக்கிறது என்றும் பொருள்கள் தரமாகக் கிடைக்கின்றன என்றும் தெரிவித்தனர்.

தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் வட்டம், பூஞ்சோலை கிராமத்தைச் சேர்ந்த திரு.ச.மாரியப்பன் அவர்கள் ராகி கொள்முதல் ரூ. 25/- லிருந்து தற்சமயம் ரூ.38.40/-க்கு உயர்த்தப்பட்டுள்ளது திருப்தியாக இருப்பதாகவும் மற்ற விவசாயிகளையும் ராகி கொள்முதல் நிலையத்திற்குக் கொண்டுவர கூறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

உரையாடலின் போது அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்களும் திட்டப் பயனாளிகளுடன் உரையாடினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in